செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

University of Jaffna Sri Lanka
RECEIVED
1970 - 7 - 8
Periodicals Division
Library

இல: 1049 | 1970 ஜூன் 7 ஞாயிற்றுக்கிழமை | ★ | விலை சதம் 5

# உதவிமந்திரிகள் 21 பேர் நியமிக்கப்பட்டனர்

## 21 உதவி மந்திரிகளின் பெயர்கள் நேற்று அறிவிக்கப்பட்டன. அவர்கள் பின்வருமாறு:

1. பாதுகாப்பு, வெளிநாட்டு அமைச்சு: திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி — திவுலப்பிட்டிய எம். பி.

2. திட்டத் தயாரிப்பு, வேலை வசதி அமைச்சு: திரு. ரத்னே தேசப்பிரிய சேனநாயக்கா — மின்னேரிய எம். பி.

3. நீர்ப்பாசன, மின்சார அமைச்சு: திரு. செனரத் சோமரத்ன — அம்பாறை எம். பி.

4. வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு: திரு. பீ. ஆர். இரத்நாயக்கா — மாவனல்லை எம். பி.

5. கல்வி அமைச்சு: திரு. பீ. வை. துடாவை — மாத்தறை எம். பி.

6. கப்பல்துறை, உல்லாசப் பயணத்துறை அமைச்சு: திரு. ரீ. பி. விக்கிரமசிங்கா — மாவத்தகமை எம். பி.

7. தொழில் அமைச்சு: திரு. டீ. ஜீ. எச். சிரிசேன — அக்குறணை எம். பி.

8. பொதுசேவை, உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சு: திரு. நீல் டீ அல்விஸ் — பத்தேகம எம். பி.

9. கைத்தொழில், விஞ்ஞானத் துறை அமைச்சு: திரு. எஸ். கே. சூரியாரராச்சி — மஹர எம். பி.

10. நிதி அமைச்சு: திரு. பேர்னட் சொய்ஸா — கொழும்பு தெற்கு 2-வது எம். பி.

11. போக்குவரத்து அமைச்சு: திரு. ரீ. பீ. எம். ஹேரத் — வலப்பனை எம். பி.

12. தோட்டங்கள், கைத்தொழில் அமைச்சு: திரு. அல்பேட் காரியவாசம் -- பெந்தர எல்பிட்டிய எம். பி.

13. நீதி அமைச்சு: திரு. இரத்தினசிறி விக்கிரமசிங்க — ஹொரணை எம். பி.

14. காணி, விவசாய அமைச்சு: திரு. எச். எம். நவரட்ன — மினிப்பே எம். பி.

15. மீன்பிடித் துறை அமைச்சு: திரு. எஸ். டீ. எஸ். ஜயரத்ன — சிலாபம் எம். பி.

16. வீடமைப்பு, கட்டிடத்துறை அமைச்சு: திரு. பி. எச். பண்டார — பதுளை எம். பி.

17. தபால், தந்திப் போக்குவரத்து அமைச்சு: திரு. வீ. ரீ. ஜீ. கருணாரத்ன — ரக்வான எம். பி.

18. சுகாதார அமைச்சு: செனட்டர் ஜே. பி. ஒபயசேகரா

19. தகவல், ஒலிபரப்பு அமைச்சு: ஜனாப் ஏ. எல். அப்துல் மஜீத் — மூதூர் முதல் எம். பி.

20. சமூகசேவைகள் அமைச்சு: திரு. ஜீ. வை. சமரசிங்கா — குளியாப்பிட்டி எம். பி.

21. கலாசார அமைச்சு: திரு. சோமவீர சந்திரசிறி — தெஸ்பாவ எம். பி. (கு—15)

## ஒத்துழைப்பு

கொழும்புத் துறைமுகத்தில் உள்ள தொழிற்சங்கங்கள் துறைமுக வேலைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு சகல ஒத்துழைப்பும் அளிக்கத் தயாராக இருப்பதாய் துறைமுகக் கார்ப்பரேஷன் தலைவரிடம் உறுதியளித்துள்ளன. [ய]



வெண்பளிங்கு மேனியில் கருங்கச்சம் அணிந்து, இளமையும் எழிலும் இணைந்து ததும்ப, இரு கைகளாலும் கவசமிட்டுக் காட்டுகிறாய். பெண்ணே, வாடா மலரான உன் முக ரோஜாவில் மொய்ப்பது கண்களா அல்லது கருவண்டுகளா? (ய)

### மீனாட்சி



என்னுங்க, மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் சேகுவேரா அங்கே, சேகுவேரா இங்கே என்று பூச்சாண்டி காட்டினார்களே, அந்தச் சேகுவேராக்கள் இப்போது எங்கே?

ஆமாங்க, அதுகள் கியூபாவுக்குப் போய் விட்டதாக்கும்!

## சபாநாயகர் ஸ்டான்லி திலகரத்தினா?

கொழும்பு, ஜூன் 7

ஏழாவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக திரு. ஸ்டான்லி திலகரத்னவையும், உதவி சபாநாயகராக ஜனாப் ஐ. ஏ. காதரையும், குமிட்டிகளின் தலைவராக திரு. தயா பஸ்குவலையும் நாடாளுமன்றம் இன்று பிற்பகல் 2 மணிக்கு கூடும்போது தெரிவு செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டம், பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றபோது மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

புதிய சபாநாயகராகத் தெரியப்படவிருக்கும் திரு. ஸ்டான்லி திலகரத்ன கோட்டே தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராவர். நியாயதுரந்தரரான இவர் 1960ம் ஆண்டிலிருந்து கோட்டே தொகுதி உறுப்பினராக இருந்து வருகிறார்.

## டாக்டர் கொல்வின் உறுதி

அந்நிய செலாவணிச் சான்றிதழ் (பீக்ஸ்) முறை இறக்குமதிப் பொருட்கள் சம்பந்தப்பட்ட அளவில் மட்டுமே ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும், ஏற்றுமதிப் பொருட்களுக்கு இம்முறை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தெரிவித்தார்.

தன்னைச் சந்தித்த பலப்பிட்டிய எம்பியிடமே தோட்டத்துறை மந்திரி திரு. சில்வா இந்த உறுதியை அளித்தார். [ல]

## ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம்

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியினரை வெளியேற்றுவது பற்றிய பிரச்சினையையிட்டு இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தும்.

முந்திய அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்த எடுத்த நடவடிக்கைகள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி குடியேற்ற, வெளியேற்ற இலாக்கா அதிபர் பணிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இந்தியா சென்றுள்ளவர் தொகை, பிரஜாவுரிமை வழங்கப்பட்டோர் தொகை ஆகிய விபரங்களுடன் இந்த அறிக்கை இந்த வாரத்துக்குள் சமர்ப்பிக்கப்படும்.

## மராமத்து வேலை நிறுத்தம்

கடுகண்ணாவை மராமத்து இலாகா ஊழியர்கள் அனைவரும் நேற்றுக் காலை வேலைநிறுத்தத்தில் இறங்கினர்.

தங்கள் கிளையின் பிரதம நிர்வாகியை உடனடியாக இடமாற்றம் செய்யும்படி அவர்கள் கோரி இருக்கிறார்கள்.

இதுவிஷயமாக விசாரணை நடத்த விசேஷ அதிகாரிகள் கோஷ்டி ஒன்று அங்கு சென்றிருக்கிறது. [ய]

## மந்திரிகள் வேலை நேரம்

எல்லா மந்திரிகளும் காலை 8.30 மணிக்கு தங்கள் காரியாலயங்களில் இருக்க வேண்டுமென பிரதமமந்திரி சிறிமாவோ பண்டாரநாயகா பணித்திருக்கிறார். [ய]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன கதி நேர்ந்தது எனக் கூறி மாண்டார்

# அரசாங்கமும் தோல்வி மந்திரிமாரும் தோல்வி

### தேர்தல் முடிவு கேட்டவர் மீளாத் துயிலில் ஆழ்ந்தார்

புலத்சிங்கள, ஜூன். 6

"அரசாங்கமும் தோற்றுவிட்டது, மந்திரிமாரும் தோற்றுவிட்டனர். எங்களுக்கு என்ன கதி நேர்ந்தது?" என்று கூறியபடியே கட்டிலில் சாய்ந்த ஒருவர் தூக்கத்திலேயே மாண்ட சம்பவம் ஒன்றுபற்றி அங்குருவா தோட்டை நிச்சட்டல் தோட்டத்தில் இருந்து அறிவிக்கப்படுகிறது.

ஏழு குழந்தைகளின் தந்தையான டி. சி. பியசேன (48) என்னும் விகிதர் ஒருவரே இவ்வாறு மாண்டார்.

திரு. ஓ. டி. டி. அவுஷதரத்ன மரணவிசாரணை நடத்தினர். இம் மரண விசாரணையில் சாட்சியமளித்த இறந்தவரின் மனைவி திருமதி கமலா பியசேன கூறியதாவது:

"எனது கணவன் அரசியலில் அதிகம் ஈடுபாடு கொண்டவர். இம்முறை நடைபெற்ற பொதுத்தேர்தலில் அவர் அதிகம் ஈடுபாடு கொண்டவராகக் காணப்பட்டார். 27-ம் திகதி அவர் வாக்களித்துவிட்டுத் திரும்பியபின் எங்களுடன் பேசிக்கொண்டு மிகவும் சந்தோஷமாகவே காணப்பட்டார். அன்றிரவு எல்லோரும் ரேடியோவில் தேர்தல் முடிவுகளைக் கேட்டோம்.

28-ம் திகதி விடியும் சாமத்தில் தேர்தல் முடிவுகளைக் கேட்டுக் கொண்டிருந்த என் கணவன், அரசாங்கம் தோற்றுவிட்டது, மந்திரிகளும் தோற்று விட்டனர்" என்று கூறியபடியே கட்டிலில் சாய்ந்தார். 28ம் திகதி நாங்கள் பகல் சாப்பாட்டை தயாரித்துவிட்டு அவரைச் சாப்பாட்டுக்காக எழுப்பினோம். அப்போது அவர் தூக்கத்திலேயே இறந்திருந்தார். முன்பு சில காலமாக அவர் இருதய நோயாலும் பாதிக்கப்பட்டிருந்தார். இம்மரணத்தைப் பற்றி நான் சந்தேகப்படவில்லை.

இருதய நோய் காரணமாக ஏற்பட்ட திடீர் மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது. (ல)

### சிஹானுக் வேண்டுகோள்

ஹாங்கூங், ஜூன் 6

கம்போடியாவில் இருந்து அமெரிக்க படைகள் வாபஸ் பெறப்பட அமெரிக்க மக்கள் தம்மாலானதைச் செய்ய வேண்டுமென பதவி நீக்கம் செய்யப்பட்ட இளவரசர் சிஹானுக் கேட்டுக் கொண்டார்.

ஹானேயில் இருந்து சிஹானுக் விடுத்த இச்செய்தி வியட்நாம் செய்தி நிறுவனம் மூலம் ஒலிபரப்பட்டது. (ர)

### அமெரிக்கா மறுப்பு

வாஷிங்டன், ஜூன் 6

வட கொரியாவினுல் கைப்பற்றப்பட்ட படகு அமெரிக்காவினுடையது என்பதை அமெரிக்க கடற்படை அதிகாரி ஒருவர் முற்றாக மறுத்தார்.

அப்படகு தென் கொரியாவுக்குச் சொந்தமானது எனக் கூறிய அந்த அதிகாரி, அமெரிக்காவின் உறவுக் கப்பல்கள் எதுவும் இப்போது அப்பகுதியில் கிடையாது என்றார். (ர)

### 'கருத்தரித்தவுடன் என்னை தவிக்கவிட்டுச் சென்றார்'

"என்னை ஆசை நாயகியாக வைத்திருந்த என் மைத்துனர், என் வயிற்றில் கரு உற்பத்தியானவுடன் என்னைத் தவிக்க விட்டு ஓடி விட்டார்" என்று இளம் யுவதி ஒருவர் கொழும்பு பிரதம நீதிபதி திரு. ஈ. எப். டீ. சில்வா முன்னிலையில் விசாரிக்கப்பட்ட தாபரிப்பு வழக்கு ஒன்றில் சாட்சியம் அளிக்கையில் கூறினர்.

இவ்வழக்கில், தோணவலையைச் சேர்ந்த தல்வத்த சௌரத் எம். விமலாவதி, தனக்கும் தன் பிள்ளைக்கும் தல்வத்த ஏ. ஏ. சிரிசேனுடயவிடம் இருந்து தாபரிப்பு கோரினர்.

மனுதாரரான விமலாவதி தனது சாட்சியத்தில் கூறியதாவது:—

"எதிர் மனுதார் எனது மைத்துனர். எனது வீட்டுக்கு அருகே தான் வசித்தார். 1968 ஆகஸ்டில் எதிர் மனுதாரின் தந்தை இறந்து விட்டார். ஏழாம் நாள் நடைபெற்ற தானம் கொடுக்கும் வைபவத்தில் உதவுவதற்காக அவர் வீடு சென்றேன். அவரின் இரு சகோதரிகளுடன் நித்திரை செய்தேன். அதிகாலை 4 மணிக்கு அவர்கள் எழும்பி விடவே, நான் மட்டும் படுத்திருந்தேன். அச்சமயம் எதிர்மனுதார் அங்கு வந்து என்னை முத்தமிட்டார். நான் அவரைத் தள்ளி விட்டேன். தான் என்னைக் காதலிப்பதாகவும் ஒருவரிடமும் சொல்ல வேண்டாம் என்றும் கூறினர்.

"அதிலிருந்து நாம் காதலர்களானோம். ஒரு நாள் நான் தனியாக இருந்த சமயம் வீட்டுக்கு வந்து என்னைக் கட்டித் தழுவி, சரசமாடினர். பின் என்னுடன் உடலுறவு வைக்க முயற்சித்தார். நான் தடுத்தேன்.

"அவர் என்னை மனதார விரும்புவதாகவும், என்னை மணப்பதாகவும் கூறி, என் தலையில் அடித்துச் சத்தியம் செய்தார். அதன் பின் உடலுறவுக்குச் சம்மதித்தேன். பின் எனது தாயார், தகப்பன் இல்லாத நாட்களில், ஒவ்வொரு வாரமும் என்னுடன் உடலுறவு கொள்வார். எங்கள் வீட்டில் வேலை செய்யும் அஸ்லின், ஒருநாள் நான் எதிர் மனுதாருடன் படுத்து இருப்பதைக் கண்டு, என் குடும்பத்துக்கு நான் அவதூறு விளைவிப்பதாக என்னை ஏசினர். பின்னர் எனது மூத்த சகோதரிக்கு இது பற்றிக் கூறினேன்.

"கடைசியாக, மே மாதத்தில் என் வீட்டுக்கு அவர் வந்த பொழுது, பல பேர் அங்கிருந்தபடியால் என்னுடன் பேசவில்லை. நான் ஒன்பது மாதக் கர்ப்பிணியானவுடன், எனது தாயார் இது பற்றி விசாரித்து விட்டு, எதிர் மனுதாரின் தாயாரிடம் முறையிட்டார்."

இக்கட்டத்தில், எதிர் மனுதாரின் வழக்குறிஞர், எதிரி 1944-ல் பிறந்தார் என்பதை ஏன் 1940-ல் பிறந்தவர் என்று பிள்ளையின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பதியப்பட்டது என வினவ, அவர் என்னிலும் நாலு வயது இளையவர் என்று சொல்ல வெட்கப்பட்டே அப்படிச் சொன்னேன் என்றார்.

மேல் விசாரணை ஜூலை 4-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ல-15)

### கடைப்பிடித்து வருக

வாரத்தில் ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்றுத் தினம் மக்களின் குறைகளைக் கேளுங்கள் இது முதல் அமைச்சர் திருமதி பண்டாரநாயக்கா அம்மையார் தமது சக அமைச்சர்களுக்கு விடுத்த முதலாவது வேண்டுகோளாகும். இது எத்துணை மகத்தானது என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. ஒரு நாட்டின் அரசு முறையாக இயங்க வேண்டுமென்றால் மக்களின் குறைகளைத் தேவைகளை அமைச்சர்கள் நன்கு உணர்ந்திருத்தல் வேண்டும். நன்கு உணர்ந்திருந்தால்தான் அவைகளுக்கு நிவாரணத்தை அளிக்கலாம். எந்த அரசும் மக்களுடன் தொடர்பில்லாது நீண்டு உயிர் வாழ்தல் அரிது. இத்தொடர்பு சில காலம் நிகழ்ந்து பின்னர் கைவிடப்படுவதாலும் நன்மையில்லை. இதை அமைச்சர்கள் யாவரும் தாரக மந்திரமாகக் கொள்ளுதல் வேண்டும்.

தந்தி

### எதிரி கழுத்தை வெட்டுவதை சாட்சி கண்டதாக கூறினார்

மத்துகமை, ஜூன், 6

"யாரோ ஒருவரின் அவலக் குரல் கேட்டு, அத்திசை நோக்கி ஓடினேன். ஹண்டி நிலத்தில் கிடக்க எதிரி அவரின் கழுத்தை வெட்டுவதைக் கண்டேன்".

கே. ஏ. புண்யசிரி விஜேநாயக்கா என்பவர் மத்துகமை நீதிபதி திரு. நிஸ்ஸங்க வீரரத்ன முன்னிலையில் விசாரிக்கப்பட்ட கொலை வழக்கொன்றில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில், பொம்புலவகே டொன் ஹண்டி என்பவரை, ஜனவரி 8-ம் திகதி பதுரெலியா பொலீஸ் பகுதியிலுள்ள ஹல்தொல என்னுமிடத்தில் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக ஜீ. டி. பியதாஸா குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

விஜேநாயக்கா மேலும் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"அன்று காலை ரப்பர் பால் வெட்டி விட்டு 10-30 மணிக்கு திரும்பி வந்தேன். தேநீர் குடித்துக் கொண்டிருக்கும் பொழுது, பொடிசிங்கோ என் தகப்பனுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது வீட்டின் முன்னால் உள்ள வீதிப் பக்கமாக அவலக் குரல் கேட்கவே, பொடிசிங்கோவும் நானும் அங்கு ஓடினோம். நாங்கள் இருந்த இடத்திலிருந்து பார்க்கையில் ஹண்டி இரத்தம் பெருக நிலத்தில் கிடந்தார். எதிரி வீழ்ந்து கிடந்தவரின் கழுத்தை வெட்டினர். இதைப் பார்த்துச் சகிக்க முடியாத நான் எதிரியை அமைதியடையும்படி கத்தினேன். ஆனாலும் எதிரி தொடர்ந்து வெட்டி விட்டுப் போய் விட்டார்.

"அதன் பின் இறந்தவர் அருகே போனவுடன் எனக்கு மயக்கம் வந்தது. திரும்பி மயக்கம் தெளியும் வரையும் இருந்து விட்டு, பதுரெலியா பொலீஸில் முறையிட்டேன்".

குறுக்கு விசாரணையின் போது சாட்சி மேலும் கூறியதாவது:-

"நான் முதல் முறை பார்க்கும் போது காலஞ்சென்றவர் நிலத்தில் கிடந்தார். இந்தச் சண்டை எப்படித் தொடங்கியது என்று தெரியாது. ஹண்டி எதிரியை தாக்கியது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் எதிரி ஹண்டியை வெட்டுவதைக் கண்டேன்".

"எதிரியையும், காலஞ்சென்றவரையும் எனக்குத் தெரியும். இருவரும் சிநேகமாய் இருந்தனர்".

மேல் விசாரணை ஜூன் மாதம் 14-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ல-15)

### தந்தை, மகன் இருவர் மீது கொலைக் குற்றச்சாட்டு

மித்தெனியா, ஜூன். 6

தந்தைக்கும் மகனுக்கும் எதிராக கொலைக்குற்றம் சாட்டப்பட்டு வலஸ்முல்லை நீதிபதி திரு. ஜி. சி. டபிள்யூ. டி. சில்வா முன் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வலஸ்முல்லை ஜுலம்பிட்டியைச் சேர்ந்த 30 வயதான ஏ. தர்மதாஸ என்பவரை வெட்டுக் கத்தியொன்றினல் தாக்கிக் கொலை செய்ததாக வலஸ்முல்லை பொலீஸ் இன்ஸ்பெக்டர் டி. மனேகரனல் ஆர். பி. பியதாஸ, ஆர். பி. நிகுலஸ் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேல் விசாரணையை ஜூன் மாதம் 17-ம் திகதிக்கு ஒத்தி வைத்த நீதிபதி சந்தேக நபர்களை அதுவரை ரிமாண்ட் மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (ல)

### கார் விபத்தில் பலருக்கு காயம்

நிவித்திகலை, ஜூன். 6

பாணந்துறை சந்தியில் இரண்டு கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதால் பலர் படுகாயமடைந்து இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இரண்டு கார்களும் பலத்த சேதத்துக்குள்ளாகின. நிவித்திகலைப் பொலிஸார் புலன் விசாரிக்கின்றனர். (ல)

தந்தி
சிறு விளம்பரங்கள்

### வசியம்

காதலில் வெற்றியை எதிர்பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் பூசாரி கோர்ட்டில் சாட்சியம்

# கருவை சிதைக்கும்படி பிரதிவாதி கோரவில்லை

### கணக்கப்பிள்ளை கொண்ட உறவால் குழந்தையாம்

மத்துகமை, ஜூன் 6

"குடலிகாமத்துக் கோயிலில் நான் பூசாரியாக இருந்த சமயம் மனுதாரப் பெண் பூசை செய்வதற்காக அங்கு வந்திருக்கிருள். ஆனால், அவள் ஒரு நாளாவது பிரதிவாதியுடன் அங்கு வந்ததுமில்லை கருச்சிதைவு செய்யும்படி பிரதிவாதி என்னிடம் கோரவும் இல்லை"

மத்துகமை நீதிபதி திரு. நிலங்க வீரரத்ன முன் விசாரிக்குப்பட்ட பெலத்தவத்தை சிவனும்ச வழக்கில் பழனி மருதைவேலு என்பவர் மேற்கண்டவாறு சொன்னர்.

இவ்வழக்கில், லத்பந்துறை பெலத்தவத்தையைச் சேர்ந்த சங்கையா ராசமணி என்ற பெண் அதே தோட்டத்தைச் சேர்ந்த மெய்யப்பன் சுப்பிரமணியம் என்ற கணக்குப்பிள்ளையிடம் சிவனும்சம் கோரினள். பிரதிவாதி கணக்குப் பிள்ளையின் கீழ் தான் வேலை செய்யும் காலத்தில் அவர் தன்னுடன் பலவந்தமாக உடலுறவு கொண்டதாகவும் அதனல் பிறந்த குழந்தைக்கும் தனக்கும் சிவனும்சம் வேண்டும் என்றும் ராசமணி தன் மனுவில் கோரியிருந்தார்.

மருதைவேலு தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:-

"கியனகத்தைத் தோட்டத்து குடலிகமம் டிவிஷனில் நான் வேலை பார்த்தேன். அதோடு கோவில் பூசாரியாகவும் நான் வேலை பார்த்தேன். மனுதாரப் பெண்ணை எனக்கு அவ்வளவு நன்ருகத் தெரியாது. ஆனல், அவள் தந்தை தே. பீ. சங்கையாவை எனக்கு நன்ருகத் தெரியும். 1966ம் ஆண்டு மார்ச் மாதம் கோயிலில் நடைபெற்ற விசேட பூசை ஒன்றுக்கு மனுதார் பெண்ணுடன் வந்திருந்த சவரியம்மா என்ற பெண்ணை எனக்கு நன்ருகத் தெரியும். சவரியம்மாவின் கணவன் சந்தனத்தையும் பிரதிவாதியையும் எனக்கு நன்ருகத் தெரியாது.

மனுதாரப் பெண் கோயிலுக்கு வரும் காலங்களில் அவள் கருத்தரித்திருக்கும் அடையாளங்களை நான் கவனிக்கவில்லை. அத்தோடு, மனுதாரப் பெண்ணுக்கும் பிரதிவாதிக்கும் இடையில் ஏதாவது தொடர்பு இருந்ததா என்றும் எனக்குத் தெரியாது. ஒரே ஒரு முறை நான் மனுதாரப் பெண்ணை மத்துகமை தொழிற் காரியாலயத்தில் சந்தித்தேன். இது தவிர இப்பெண்ணை நான் தொழிற் கந்தோருக்கு அழைத்துச் செல்லவோ அல்லது அவள் சார்பாக எவரும் ஆஜராகியதோ கிடையாது."

கோயில் பூசைகளில் கலந்து கொள்வதற்கு பெருந்தொகையானோர் வருவதால் ஒருவேளை சந்தனமும் பிரதிவாதியும் அங்கு வந்திருந்தாலும் தன்னல் கவனித்திருக்க முடியாது என்று குறுக்கு விசாரணையில் சாட்சி சொன்னர்.

மேல் விசாரணை ஜூன் 8ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ல)

### பாம்பு தீண்டியதால் பாம்பாட்டி மாண்டார்

அஹங்கமை, ஜூன். 6

பாம்பாட்டிப் பிழைப்பவர் ஒருவர் பாம்பு தீண்டியதால் மாண்ட சம்பவம் ஒன்று இப்பகுதியில் இருந்து அறிவிக்கப்படுகிறது.

ஹபராதுவைப் பகுதியில் கூடாரம் போட்டு பாம்பாட்டிப் பிழைத்த குறவர் கூட்டத்தைச் சேர்ந்த ராமசாமி ரெங்கசாமி (40) என்பவரே இவ்வாறு மாண்டார்.

மரண விசாரணையில் இறந்தவரின் மனைவியான நசக்கா சாட்சியமளிக்கையில் கூறியதாவது.

"என் கணவன் பாம்பாட்டிப் பிழைப்பதற்காக கூடாரத்தை விட்டு காலையில் வெளியேறினர். அப்போது பெட்டியில் இரண்டு நாக பாம்புகளைக் கொண்டு சென்ருர். மாலையில் வீடு திரும்பிய சமயம் பெட்டிக்குள் மூன்று நாகங்கள் இருப்பதைக் கண்டேன். புதிதாக ஒரு பாம்பைப் பிடித்ததாகவும் அது தன்னைத் தீண்டியதாகவும் அவர் என்னிடம் சொன்னர்"-

இறந்தவரின் மாமனுரான ராமசாமி ஆரச்சி சாட்சியமளிக்கையில், 6யில், புதிதாக பிடித்த பாம்பின் பல்லைக் கழற்ருமல் மற்றப் பாம்புகளுடன் தனது மருமகன் ஆடவைத்திருக்கிருர் என்றும் பின்பு பாம்புக்கடிக்கு மருந்துவம் பார்க்க பௌத்த பிக்குவிடம் வந்ததாகவும் சொன்னர்.

வண.மெடரதரதன ஜோதி என்ற பௌத்த பிக்கு சாட்சியமளிக்கையில், ராமசாமி ரெங்கசாமி பாம்பு தீண்டி இறந்துள்ளாரென நிச்சயமாகக் கூறமுடியும் எனச் சொன்னர்.

பாம்புக் கடியால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது. (ல)

### உலக வங்கி கடன்

வாஷிங்டன், ஜூன் 6

இந்திய கைத்தொழில் கடன், மூலதன கூட்டுத்தாபனத்திற்கு உலக வங்கி 4 கோடி டாலரை உதவியாக வழங்கியுள்ளது-

### தீயினல் சுட்ட வழக்கில் பள்ளி ஆசிரியை விடுதலை

15 வயது வேலைக்காரச் சிறுமி ஒருத்தியை குப்பி விளக்கொன்றினல் தாக்கி தீயினல் சுட்டதாக பள்ளி ஆசிரியை ஒருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தென் கொழும்பு நீதிபதி திரு. கொலின் மெண்டிஸ் எதிரியை விடுதலை செய்தார்.

மொரட்டுவை முரவத்தையைச் சேர்ந்த ஈனட் குணவதி என்ற இளம் பெண்ணை தீயினல் சுட்டுக் காயப்படுத்தியதாக கல்கிசை காலி ரோட்டைச் சேர்ந்த கிறிஸ்தோபர் த மெல் என்னும் ஆசிரியைக்கு எதிராக கல்கிசைப் பொலீஸாரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக் காரப் பெண்ணின் சாட்சியத்தை மாத்திரம் பதிவு செய்து கொண்ட நீதிபதி சாட்சியம் திருப்திகரமாக இல்லை எனக் கூறி எதிரியை விடுதலை செய்தார்-

முறைப்பாட்டுக்காரப் பெண் மீது பலாத்காரம் புரிய முயன்றதாக எதிரியான ஆசிரியையின் கணவன் மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த பிறிதொரு வழக்கிலும் நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினர்.

வழக்கறிஞர் திரு. வேர்னன் பொத்தேஜு எதிரி தரப்பிலும் கல்கிசை பொலீஸார் முறைப்பாட்டுக்காரர் தரப்பிலும் ஆஜராகினர். (ல)

### மரவள்ளிக்கிழங்கு விஷமாகி நாலு வயது குழந்தை மரணம்

பண்டாரவளை, ஜூன். 6

பெற்றேர் வீட்டில் இல்லாத சமயம் தோட்டத்தில் வளர்ந்திருந்த மரவள்ளிக் கிழங்கை அவித்துச் சாப்பிட்ட குழந்தைகளில் நாலு வயதுக் குழந்தையொன்று மாண்ட சம்பவம் பண்டாரவளை வலஸ்பெத்தை என்ற இடத்திலிருந்து அறிவிக்கப்படுகிறது.

எம். அல்லோன் என்ற நாலு வயதுக் குழந்தையே இவ்வாறு மாண்டது. திரு. ஆர். ஏ. ரத்நாயக்கா நடத்திய மரண விசாரணையில் இறந்த குழந்தையின் தந்தையான ஜனுப் முஹமது மன்சூர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது

"அன்றைய தினம் மாலை, நானும் மனைவியும் வீட்டில் இல்லாத நேரம் பசி காரணமாக குழந்தைகள் தோட்டத்தில் இருந்து மரவள்ளிக்கிழங்கு தோண்டி அவித்துச் சாப்பிட்டுள்ளன. அன்றிரவு ரொட்டியும் மரக்கறியும் சமைத்துச் சாப்பிட்ட பின் குழந்தைகளுக்கு வாந்தி, மயக்கம், வயிற்ருேட்டம் கண்டது. உடனே குழந்தைகளை பண்டாரவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன் இளைய குழந்தை மாண்டது. மற்றக் குழந்தைகளுக்கு இப்போது வைத்தியம் பார்க்கிறேன்"

தொடர்ந்து சாட்சியமளித்த அவர் தான் தையற்காராக வேலை பார்த்து சம்பாதிக்கும் 150 ரூபா பணத்தில் குடும்பத்தில் 12 பேர் மிகவும் கஷ்டத்துடன் சீவியம் நடத்துவதாகக் கூறினர்.

மரவள்ளிக் கிழங்கு விஷமாகியதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ல)

<u>20 வயது இளம் பெண் நஞ்சு குடித்தாள்</u>

### பெற்ருேர் பலவந்தம் உயிருக்கே வினையானது

ஹொரணை, ஜூன். 6

பெற்ருேரின் பலத்த எதிர்ப்புக்கிடையில் தனது அன்புக் காதலனுடன் சென்று புதிய வீடொன்றும் கட்டி சிலமாதங்களாக இன்ப வாழ்க்கை நடத்திய கட்டிளம் குமரியொருத்தியை மனைவி இறந்த இரு குழந்தைகளின் தந்தை ஒருவருக்கு திருமணம் செய்து கொடுக்க பெற்ருேர் எத்தனித்ததால் மனத்துயர் அடைந்த குமரி நஞ்சு குடித்துத் தற்கொலை செய்து கொண்டாள்.

ஹொரணை ஆஸ்பத்திரியில் நடைபெற்ற மரண விசாரணை ஒன்றில் மேற்கூறிய சம்பவம் தெரிவிக்கப்பட்டது.

கல்பாத்தையைச் சேர்ந்த ஞானவதி என்ற 20 வயது இளம் பெண்ணே இவ்வாறு மாண்டாள். ஹொரணை திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. டபிள்யூ. ஏ. டொன் சேதா மரண விசாரணை நடத்தினர்.

தனது கண்களில் நீர் ஆருகப் பெருக இறந்த பெண்ணின் காதலன சந்திரசேன (21) சாட்சியமளிக்கையில் கூறியதாவது.

"நான், பீடிக் கம்பனி ஒன்றில் மேற்பார்வையாளராக வேலை செய்த காலத்தில் அந்தக் கம்பனியில் வேலை செய்த ஞானவதியுடன் காதல் தொடர்பு ஏற்பட்டது. அதன் பின் நான் இந்த வேலையை விட்டு விலகி வேறு வேலைக்குச் சென்றேன். ஆனல் எங்களுக்கிடையிலான தொடர்பு தொடர்ந்து இருந்து வந்தது.

"தனக்கு வீட்டில் பெருந்தொல்லையாக இருப்பதாகவும் கூடிய சீக்கிரம் தன்னை அழைத்துச் செல்லும்படியும் கூறி அவள் கடிதம் எழுதினள். பின்பு ஒரு நாள் பாத்தகடையில் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்தோம். இந்தச் சந்திப்பின் போது தன்னை அன்றைய தினமே அழைத்துச் செல்லும்படி கூறி அவள் அழுதாள். பின்பு நான் அவளை அழைத்துச் சென்றேன். இருவரும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தினேம். இப்படியிருக்கும் காலத்தில் எங்களைப் பார்ப்பதற்கு ஞானவதியின் தாயாரும் அடிக்கடி வருவார்.

"பின்பு ஞானவதியின் தாயாருக்கு திடீரென சுகயீனம் ஏற்பட்டதால் நான் அவளை அவளுடைய தாயாரின் வீட்டில் நிறுத்திவிட்டு ஊருக்குத் திரும்பினேன். ஆனல் அடிக்கடி அவர்கள் வீட்டுக்குச் சென்று அவர்களைப் பார்ப்பது வழமை. நான் ஞானவதிக்கு மந்திரம் செய்ததாக அவள் தந்தை என்னை ஏசினர். அந்த வீட்டில் தங்கியிருந்த ஹரிசன் என்பவர் என்னைத் தாக்குவதாகவும் பயமுறுத்தினர்.

"தன்னை, மனைவியை இழந்த இரு பிள்ளைகளின் தந்தையான ஹரிசனுக்கு மணமுடித்து வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் உடனே வந்து அழைத்துச் செல்லும்படியும் ஞானவதி கடிதம் எழுதியிருந்தாள் நஞ்சு குடித்து அவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருப்பதாகக் கேள்விப்பட்டு நான் ஆஸ்பத்திரிக்குச் சென்ற சமயம் அவள் இறந்து விட்டாள்."

முட்டாள் கொள்கைகளையுடைய பெற்ருேரே இம் மரணத்துக்குக் காரணம் எனக் கூறிய திடீர் மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (ல)

## கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

S. P. S. ஜெயம் அன் கோ.

மதுரை - கொழும்பு.

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு,

கொழும்பு - 11.

தபால் பெட்டி: 1298.

தொலைபேசி எண்: 26584




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீன ஊழியர் கோஷ்டியின் முயற்சி தோல்வி

# கப்பல் செல்லுவதற்கு என்.எம்.தடை உத்தரவு!

"மால்டிவியன் எக்ஸ்புளோரா" என்ற கப்பலுக்கு கொழும்புத் துறைமுகத்தை விட்டகல அனுமதி அளிக்க வேண்டாமென நிதி மந்திரி டாக்டர் என்-எம்-பெரேரா சுங்கப் பகுதி பிரதம கலெக்டருக்கு நேற்று உத்தரவிட்டார்.

இலங்கை கப்பல் கூட்டுத் தாபனத்தினுல் 1,96,000 பவுணுக்கு மாலேதிவு தேசிய வர்த்தகக் கூட்டுத் தாபனத்தினரிடமிருந்து இக் கப்பல் வாங்கப்பட்டது.

இக்கப்பலே மிகவும் விரைவில் துறைமுகத்தில் இருந்து வெளியேற்ற கப்பலில் வேலை செய்யும் சீனர் கோஷ்டியொன்று எடுத்த முயற்சியை அடுத்தே நிதி மந்திரி மேற்கண்ட உத்தரவை விடுத்துள்ளார்.



டாக்டர் பெரேரா

இக்கப்பலே இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் விலே கொடுத்து வாங்கிய பின் "லங்கா சிங்ஹ கப்பல் கூட்டுத்தாபனம்" என்ற ஒரு கம்பெனிக்கு ஒப்படைத்தது ஏன் என்பதைப் பற்றி நிதி மந்திரி டாக்டர் பெரேரா, விசாரணைகள் நடத்தி வருகிருர். இந்தக் கம்பெனி இலங்கையில் பதிவு செய்யப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கம்பெனி பனமாவில் பதிவாகியுள்ளது.

இந்தக் கம்பெனியின் 51 வீதமான பங்குகள் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்துக்கும் 49 சதமான பங்குகள் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புள்ள சிங்கப்பூர் வாசி ஒருவரால் வாங்கப் பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

பொதுத் தேர்தல் தினமான மே 27-ம் திகதிக்கு முன் இக்கப்பலே இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் வாங்க இருந்தது. ஆனல் இது நடைபெறவில்லே, இக் கப்பலுக்குத் தேவையான 42 ஊழியர்கள் இது காலவரையும் கொழும்பு ஹோட்டல் ஒன்றில் தங்கி இருந்த பின் கடந்த வியாழக்கிழமை கப்பலேப் பொறுப்பேற்றனர். (ல)

## தமிழ் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை ஆதரிப்பதென முடிவு செய்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள், வேலேயில்லாத் திண்டாட்டத்தை நீக்குதல், விலேயேற்றத்தைத் தடுத்தல் போன்றவற்றுக்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவளிப்பதென்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

## இ. போ. ச.வில் இருக்கும் 25 ஆயிரம் பேருக்கு வேலே இல்லேயாம்

இலங்கை போக்கு வரத்துச் சபையில் தேவைக்கும் அதிகமாக 25 ஆயிரம் ஊழியர்கள் சும்மா இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் பதவி நியமனம் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு கமிஷன் ஒன்றை ஏற்படுத்துவதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலேவர் திரு- அனில் முனசிங்க முடிவு செய்துள்ளார்.

முன்னேய அரசாங்கத்தின் பதவி காலத்தில், அரசியல் காரணங்களுக்காக இந்த நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கலாம் என்று திரு. அனில் முனசிங்க கருதுவதாகத் தெரிகிறது.

இதற்கிடையில், வேலேயற்றிருக்கும் ஊழியர்களே வேறு கூட்டுத் தாபனங்களுக்கு மாற்றி விடுவதற்கான நடவடிக்கைகளே திரு. அனில் முனசிங்க மேற்கொண்டு வருகிருர்.

இது சம்பந்தமாக போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனவுடன் இவர் தொடர்பு கொண்டுள்ளார். (ல)

## 14-ம் திகதி கடற்படை அணிவகுப்பு

சுதந்திரச் சதுக்கத்தில் இம்மாதம் 14-ந் திகதி நடைபெறவிருக்கும் சிம்மாசனப் பிரசங்க வைபவத்தின் போது இலங்கை கடற்படையினரின் அணிவகுப்பு இடம் பெறும்.

மகாதேசாதிபதி சுதந்திர சதுக்கத்தை வந்தடையும் போது இந்த கடற்படை அணிவகுப்பு நடைபெறும். சென்ற முறை இலங்கை ஆகாயப் படையினர் இந்த அணிவகுப்பு மரியாதையை நடாத்தினர்.

சிம்மாசனப் பிரசங்கத்தை மகாதேசாதிபதி நிகழ்த்திய பின், பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் கூடி சிம்மாசனப் பிரசங்கம் பற்றி விவாதிப்பர். (ல-15)

## புதிய தலேவர்

இலங்கை மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் முன்னுள் தலேவரான டாக்டர் ஆனந்த விமலசூரிய பொதுச் சேவை ஆணைக் குழுவின் தலேவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு இராஜனுக்கு

## அரசாங்க கட்சியில் இடமில்லேயாம்

மட்டக்களப்பு இரண்டாவது எம்- பி- திரு- ராஜன் செல்வநாயகம் அரசாங்க நாடாளுமன்றக் கட்சியில் சேர்த்துக் கொள்ளப் பட மாட்டார் என்றும் அவரைச் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் எதுவும் இப்போது ஏற்படவில்லே என்றும் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா தன்னிடம் கூறியதாக மட்டக்களப்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பாகப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்த ஜனுப் எம்- சி- ஏ- ரஹ்மான் கூறியுள்ளார்.

"தேர்தலுக்கு முன் யூ- என். பி- டிக்கட்டைப் பெறுவதற்காக திரு- கே. டபிள்யூ- தேவநாயகத்தின் பக்கத் துணையோடு ஓடித் திரிந்தவரான திரு- செல்வநாயகம், தேர்தலுக்குப் பின் ஸ்ரீ ல- சு- கட்சியின் அபரிமித வெற்றியினல் மயக்கமுற்று அக்கட்சிக்குள் "அழையா, வீட்டுக்குள் நுழையா விருந்தாளி"யாக புகுந்து கொள்ள முற்படுவது சிரிப்பும் வேடிக்கையும் நிறைந்த செயலாகும்" என்றும் ஜனுப் ரஹ்மான் கூறினுர்.

பிரதமரை மட்டக்களப்புக்கு அழைக்க திரு- ராஜன் செல்வநாயகம் முயற்சி எடுக்கிருர் என்ற செய்தியில் எதுவித உண்மையும் இல்லே என்று தெரிவித்த ஜனுப் ரஹ்மான் "ஸ்ரீ. ல- சு- கட்சி ஆதரவாளர்கள், உறுப்பினர்களின் அழைப்பின் பேரில்தான் பிரதமர் மட்டக்களப்புக்கு வர இருக்கிருர் என்றும் கூறினுர்.

ஜனுப் ரஹ்மான் தொடர்ந்து கூறியதாவது:— "பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை நேற்று முன்தினம் இரவு நான் சந்தித்துப் பேசினேன். அப்போது மட்டக்களப்பு இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினர் திரு- ராஜன் செல்வநாயகம் அரசாங்க நாடாளுமன்றக் குழுவில் சேர்க்கப்பட மாட்டார் என்றும், விரும்பினுல் அவர் அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களிப்பதில் எவ்வித தடையும் இல்லே என்றும் பிரதமர் என்னிடம் கூறினுர்- மேலும், "மட்டக்களப்புக்கு நான் விஜயம் செய்வதானல் ஸ்ரீ- ல- சு- கட்சியின் ஆதரவாளர்களின் அழைப்பின் பேரில் மட்டுமே விஜயம் செய்வேன்" என்றும் பிரதமர் என்னிடம் தெரிவித்தார்.

"அத்துடன் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா தொகுதிகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் என்னைக் கலந்தாலோசித்தே நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பிரதமர் ஸ்ரீமாவோ என்னிடம் உறுதி அளித்தார்" என்ருர்-

மட்டக்களப்பின் அவசரத் தேவைகள் பற்றி பிரதமரிடமும், அமைச்சர்களிடமும் தான் விளக்கிக் கூறியதாக திரு- ராஜன் செல்வநாயகம் பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டது பற்றி தந்தி நிருபர் ஜனுப் ரஹ்மானிடம் கேட்ட போது, "இந்தக் கூற்றில் எவ்வித உண்மையும் இருப்பதாகத் தோன்றவில்லே என்றும், திரு. ராஜன் செல்வநாயகம் பிரதமரைச் சந்தித்துப் பேசியதாக பிரதமர் கூறவில்லே" என்றும் அவர் தெரிவித்தார். (ல)

முன்னுள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் போதும் இவர் இக்குழுவில் அங்கம் வகித்தார். திருவாளர்கள் டபிள்யூ- ஈ- அபேசுன், ஈ- எச்- டி- அல்விஸ் ஆகியோார் இக்குழுவில் மற்றைய அங்கத்தவர்களாவர். (ல)


## பிரசித்த ஏல விற்பனே

அட்டன் மெயின் வீதி 66-ம் நிர். கடையில் எஸ். கே. வை. நடராஜ பிள்ளே அன் கோ என்ற விலாசத்தில் நகை அடைவு பிடிக்கும் ரா. நடராஜபிள்ளே அவர்களிடம் 1-7-62 முதல் 31-3-69 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1970, ஜூன் மாதம் 25-ம் திகதி வியாழக்கிழமை காலே 11 மணி தொடக்கம் குறித்த கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் என்ஞல் விற்கப்படும்.

**A.M.சோமசுந்தரம்**
வெந்திஸ் மேஸ்தர்.
அட்டன்.
2-6-70.

## பிரசித்த ஏல விற்பனே

நாவலப்பிட்டி கம்பளே ரேட் 25-ம் நிர். கடையில் ஏ. கே. எம். தேவருயபிள்ளே அன் கோ என்ற விலாசத்தில் நகை அடைவு பிடிக்கும் கரு. பெரியண்ணபிள்ளே அவர்களிடம் 10-6-63 முதல் 24-3-68 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1970, ஜூன் மாதம் 30-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலே 9 மணி தொடக்கம் குறித்த கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் என்ஞல் விற்கப்படும்.

**A.M.சோமசுந்தரம்**
வெந்திஸ் மேஸ்தர்.
அட்டன்.
2-6-70.

எங்கும் விற்பனேயாகிறது

சித்ராலயா
சினிமா வார இதழ்
ஆசிரியர் ஸ்ரீதர்

அதிக படங்கள் நிறைந்த
சினிமாப் பத்திரிகை.
★ எம். ஜி. ஆர். சொன்ன குட்டிக்கதை
★ சிவாஜியின் சுற்றுப்பயணம்
★ ஜெயலலிதாவுக்குப் பிடிக்காத கேள்வி
இன்னும் பல புதுமையான அம்சங்களோடு
எங்கும் விற்பனேயாகிறது.
பிரதியின் விலே 50 சதம் மட்டுமே.

ஏக விநியோகஸ்தர்கள்:
**ஆல் சிலோன் டிஸ்ற்றிபியூட்டர்ஸ்**
353-5, டாம் வீதி,
த. பெ. எண்: 96, கொழும்பு - 12.


இப்பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை), வெளியீட்ட திகதி 7 ஜூன் 1970-
Thanthi 5, Gunasena Mawatha, Colombo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org